

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலக வளாகத்தில் 27.12.2025 அன்று நடைபெற்ற விழா நிகழ்வில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிகளில் புதை சாக்கடை அடைப்பை நீக்கும் வகையில் ரூபாய்.3.78 கோடி மதிப்பீட்டில் புதிதாக வரப்பெற்ற சூப்பர் சக்கர் ரீசைக்கிளினர் வாகனத்தை (Super Sucker Cum Jetting with Recycling Facility Vechcle) மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிருவாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், நகரப் பொறியாளர் சிவபாதம், செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி வடுவூர் தென்பாதி ஊராட்சி சாத்தனூர் கிராம மக்களின் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில், தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட “புதிய பகுதிநேர அங்காடியை” தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ராஜா மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஒன்றியக் கழக செயலாளர் நா.கவியரசு, மாவட்டப் பிரதிநிதி கருணாநிதி கழக முன்னோடிகள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கே..கே.செல்லப்பாண்டியன் தலைமை! சி.சண்முகம் ஏற்பாடு! துணை முதல்வர் பிறந்த நாள்!

# குன்றாண்டார்கோவிலில் மாட்டு வண்டி - குதிரை வண்டி பந்தயம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜன,1-

கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றிய தி.மு.கழகத்தின் சார்பில்

குண்டாண்டார் கோவில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் குலவாய்ப்பட்டி சி. சண்முகம் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டி & குதிரை வண்டி பந்தயம் வருகின்ற 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் மோசகுடி விளக்கு (கீரனூர்ஒடுகம் பட்டி ரோட்டில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்.



போட்டியில் பெரிய மாடு சிறிய மாடு குதிரைப் பந்தயம் முதலில் பெரிய மாடு 8 மயில் தூரம் கணக்கிடப்பட்டு மாட்டு வண்டிகள் சீறி பாய்ந்து சென்றன இதனை இருபுறமும் பொதுமக்கள் கண்டு ரசித்தனர் போட்டியில் வெற்றி பெற்று வரும் மாட்டு வண்டி உரிமையாளர்கள் சாரதி முதல் பரிசு 40,000 ரூபாய் 2 ஆம் பரிசு 30 ஆயிரம் மூன்றாம் பரிசு 20 ஆயிரம் நான்காம் பரிசு பத்தாயிரம் என பரிசுத்தொகை சான்றிதழ்களும் கனிமவளத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி வடக்கு மாவட்ட செயலாளர் கே கே செல்லபாண்டியன் மற்றும் குளவாய்ப்பட்டி மத்திய ஒன்றிய கழக செயலாளர் சி சண்முகம் ஆகியோர். வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளருக்கும் சாரதிக்கும் பரிசு தொகை சான்றிதழ் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் கே.ஆர்.என்.போஸ், கந்தர்வக்கோட்டை தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் மணவழகன்,

ஒன்றியச் செயலாளர்கள் என்.சேட்டு, ஓ.எஸ். வெங்கடாச்சலம், கே.பி. அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், அஸ்ரப் அலி, சி.கே.வி.செல்லையா, கே.ஆர். கரிகாலன், சக்திவேல், ஜி. சின்னப்பா, புதிய குதிரைடி. செல்வம், எம். பழனிச்சாமி, பி. கராத்தேடி.முத்து, வி.வினோத், வி.டி.செல்வம். பி.ராஜ்குமார், கே .ஆர்.பாலமுத்து, பி. ராஜராஜ சோழன், பி.சி. என்.கண்ணன், எம்.ஏ.எம். இம்தியாஸ், ஜெ. அசரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், எஸ்.வி.ஆர் ஸ்டாலின், ஆர்.கே. தவமணி, பி. ஆரோக்கியசாமி, மா.சின்னத்துரை மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் - முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, ஜன.1-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளை (02/01/2026 - வெள்ளிக்கிழமை) காலை 8 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வருகை தந்து திருச்சி மாவட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ அவர்களின் சமத்துவ நடை பயணத்தை துவக்கி வைக்க வருகை தர உள்ளார்கள் . அவரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் திருச்சி விமான நிலையம் முதல் குட்செட் மேம்பாலம் வரை உற்சாக வரவேற்பு தர உள்ளோம் .

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி,ஒன்றிய, நகர, பேரூர் ,வட்ட, வார்டு,கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.




கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சூரம்பட்டி ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக, தேசிய கால்நடை நோய்த்தடுப்பு திட்டம் கோமாரி நோய் தடுப்பூசி 8வது சுற்று முகாமை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் துவக்கி வைத்து கால்நடை வளர்ப்போருக்கு தாதுஉப்பு கலவைகளை வழங்கினார்கள். பின்னர் பர்கூர் பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையத்தை மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்எல்ஏ திறந்து வைத்து சிறப்புரையாற்றி அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கினார் . இந்நிகழ்ச்சியில் நாகராஜ் , மகேந்திரன், சந்தோஷ் குமார், பேரூர் வெங்கடப்பன், மற்றும் கவுன்சிலர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில்

# சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் (S.I.R) குறித்து செயற்குழு ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, ஜன.1-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாளை (02.01.2026 - வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.மனோகரன், தலைமையில் S.I.R குறித்து செயற்குழு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அதனை தொடர்ந்து மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி. பழனியப்பன் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் (S.I.R) குறித்து ஆலோசனைகள் வழங்க உள்ளார். அதுசமயம் தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.புதியதாக பிரிக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு BLA2, BLCகளுக்கு புதிய கழக உறுப்பினர்களை நியமித்தல் குறித்தும்.

2.No Mapping Listல் நமது வாக்காளர்களை அடையாளம் கண்டு உரிய ஆவணங்களை பெற்று BLA2விடம் சமர்ப்பித்து வாக்காளர்களாக சேர்த்தல் குறித்தும்.

3.03.01.2026, 04.01.2026 அன்று நடைபெறும் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாமில் BLA2 வின் பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. நாகரத்தினம்

சனவரி 1 (2024)



கழகம் துவக்கப்பட்ட போதே, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, காடையாம்பட்டி பகுதியில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

ஓமலூர் வட்டச் செயலாளர், காடையாம்பட்டி ஒன்றிய பொறுப்பாளர் என கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

பூசாரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர், காடையாம்பட்டி ஒன்றியக்குழு துணைத் தலைவர், காடையாம்பட்டி ஊரக வளர்ச்சி வங்கி தலைவர், தீவட்டிப்பட்டி வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு சங்க தலைவர், சின்னதிருப்பதி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் என பல்வேறு பதவி வகித்தவர்.

மொழிப் போர் தியாகியான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### 100 நாள் வேலைத் திட்டத்தை சிதைத்த

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து அரியலூரில் ஆர்ப்பாட்டம்!

அரியலூர்,ஜன.1–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது அரியலூர் நகரக் கழக செயலாளர் இரா முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர்கள் அறிவழகன், மா.அன்பமுகன், தெய்வ இளையராஜா, அரியலூர் நகர மன்ற தலைவர் சாந்தி கலைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபாஷ் சந்திரசேகர், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மேனாள் விசிக மண்டல பொறுப்பாளர் அன்பானந்தம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பத்மாவதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இளங்கோவன் கழகப் பொதுக்குழு உறுப்பினர் இரா பாலு, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் க.அருண்,மா, ஜெயக்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கி, மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது ஆர்ப்பாட்டம் அரியலூர் மாவட்டம் முழுவதும் உள்ள ஆண்டிமடம், திருமானூர், ஜெயங்கொண்டம், அரியலூர், செந்துறை, தா.பழூர் ஆகிய அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது.

நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள் தர்மலிங்கம், நெடுஞ்செழியன், சரவணன், கந்தசாமி, ரவி, சண்முகம், கருப்பையன், விஜயா நடராஜன், முருகேசன், காசிநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் பழனி, பாலகிருஷ்ணன், கண்ணன், அறிவழகன், சகுந்தலா தேவி, தண்டபாணி, விசிக எஸ் ஆர்.மதி, தனகோடி, தங்கராசு, உத்திராபதி, ம.தி.மு.க. தங்கவேல். மனோகரன். உஷா செல்வம், அண்ணாதுரை, திராவிட கழகம் கோபாலகிருஷ்ணன், சிவக்கொழுந்து செந்தில், காமராஜ், தர்மா, மருதமுத்து தண்டபாணி, கிருஷ்ணன், சையது இப்ராஹிம், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சியின் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



கரூர் தாந்தோணி மலை அரசு கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமை துவக்கி வைத்து பணிநியமன ஆணைகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார். அருகில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன் உள்ளனர்.